1989 ஏப்ரல் 25]

குறிஞ்சான் குளத்தில் துணை மின் நிலையம்.

127. —(*வினா எண். 195)—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குளம் தொகுதிக்குட்பட்ட குறிஞ்சான் குளத்தில் உள்ள துணை மின் நிலையம் செயல்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் அதனை மீண்டும் இயங்கச்செய்ய என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சுரண்டை, வன்னிக்கோனேந்தல், ஆலங்குளம் 66/11 கே. வி. உபமின் நிலையங்களிலிருந்து மின் அழுத்தமும், மின் பளுவும் சரியாக உள்ளதாலும், மின்சாரம் சீராக அப்பகுதிகளுக்கு குறித்த நேரங்களில் வழங்கப்படுவதாலும், குறிஞ்சான்குளத்தில் தற்காலிகமாக நிறுவப்பட்ட ஒரு எம். வி. ஏ. லைன்டேப் உபமின்நிலையம் உபயோகத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. மறுபடியும் இயங்கச் செய்வதற்கான ஏற்பாடுகள் ஏதுமில்லை.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிஞ்சான்குளத்தில் ஏற்படுத்தப்பட்ட லைன் டேப் உபமின்நிலையம் சுமார் 32 கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு, பம்ப் செட்களுக்கு மிகவும் பயன் உள்ளதாக இருந்தது. அந்த மின்சார சப்ளை இப்போது நிறுத்தப்பட்டு இருப்பதன் காரணத்தால் அங்கேயுள்ள விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு பம்ப்செட்டுகளே பாதிக்கப்பட்டுப் போய் விடக் கூடிய அளவில் அவர்கள் மிகவும் துன்பப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையைப் போக்கி, நிவர்த்தி செய்து, ஆவன செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த பகுதிகளுக்கு சீரான முறைப்படி மின்சாரம் வழங்கப்படவேண்டும் என்பதற்காக தற்காலிகமாகத் தான் இது அமைக்கப்பட்டது. அதன் பிறகு அதன் அருகிலே இரண்டு துணை, சப் ஸ்டேஷன்கள் இயங்கத் தொடங்கியதால், இது தேவை இல்லை என்று கருதி இப்

போது நிறுத்தப்பட்டிருக்கிறது. அதிலிருந்தே விவசாயிகளுக்கு சீராக மின்சாரம் விநியோகிக்கப்படுகிறது. மேலும் இந்தத் திட்டத்திலிருந்து மின்சாரம் விநியோகித்தால் நம்அரசாங்கக் கட்டுப்பாடு வைத்திருக்கிறோமே, விவசாயிகளுக்கு காலையிலே 4 மணி நேரம் மாலையிலே 4 மணி நேரம் என்பது இயங்காமல் போய்விடும் என்பதற்காகத்தான் அது நிறுத்தப் பட்டிருக்கிறது.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலுள்ள மக்கள் அதாவது அங்குள்ள அதிகாரிகளுக்கு, அந்த மின்சாரத்தை அங்கே இயக்கிக் கொண்டிருக்கிற அந்த அதிகாரிகளுக்கு வீட்டு வசதி போன்ற சில வசதிகள் இல்லாததால் அது தடை செய்யப்பட்டிருக்கிறது என்று பரவலாகப் பொதுமக்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அப்படியென்றால் அதற்கு நீங்கள் நடவடிக்கை எடுப்பீர்களா என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் மின்சார சப்ளையானது எங்கள் தொகுதியிலே சரியாக இல்லை. அதற்கும் சீராக விவசாய மக்களுக்கு மின்சாரத்தை கொடுப்பதற்கு நீங்கள் நடவடிக்கை எடுப்பீர்களா என்பதை பற்றி நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக விவசாயிகளுக்கு சீராக மின்சாரம் கண்டிப்பாக வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை ஆய்வு செய்து, அதுபோல அதிகாரிகளுக்காக அது நிறுத்தி வைக்கப்பட்ட திட்டம் என்பது எங்களுக்குத் தெரிந்த வரை அதுபோல இல்லை. அதுமாதிரி அதிகாரிகளுக்காக நிறுத்தி வைக்கப்பட்டால் அது ஆய்வு செய்யப்பட்டு திரும்பவும் இயக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

சென்னை, இராயபுரம் பகுதியில் குடிசை மாற்று வாரிய வீடுகள்.

*128. — (*வினா எண். 1314)*

திரு. இரா. மதிவாணன்: மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, இராயபுரம் பகுதியிலுள்ள குடிசை மாற்று வாரிய வீடுகள் பழுதடைந்த நிலையில் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?